## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| O.S. No. 132/2014 | Date : 12.12.2023 | DW3 |
| Name: நல்லதம்பி | த/பெ.செங்கோடன் | |
| Evidence Recorded Time: 4.50 P.M. to 5.30 P.M | | |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் யார் யாருக்காக சாட்சி அளிக்கிறேன் என்றால் 9,10 பிரதிவாதிகளுக்காக சேர்த்து சாட்சி அளிக்கிறேன். யார் யார் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் அப்பு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அப்பு என்பவர் இறந்துவிட்டார் என்றால் தெரியும். அவருக்கு சங்குபதி என்ற மனைவியும் வீரராஜ் என்ற மகனும் உள்ளார் என்றால் எனக்கு அதைபற்றி தெரியாது. அப்பு மட்டும் தான் வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறார் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். அப்புவின் சட்டப்படியான வாரிசுகள் யார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. யார் யார் மேல் அப்பு எங்களை தவிர்த்து வழக்கு போட்டுள்ளார் என்றால் கோசலை, லட்சுமி மற்றவர்கள் பெயர் தெரியாது. மேற்படி வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் 16-ல் 8 பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளார். வேறு என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது அப்பு கேட்டுள்ள மற்ற பரிகாரங்களை வழங்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.எந்த சர்வே எண்ணில் பரிகாரம் கேட்டுள்ளார் என்பது தெரியுமா என்றால் என் சர்வே எண் தான் தெரியும் மற்ற எண்கள் தெரியாது. என்னை பொறுத்து மட்டும்தான் வழக்கு தெரியும் என்றும் மற்றவர்கள் பற்றி வழக்கு விவரம் தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரிதான். என் பிரமாண பத்திரிகையில் கோசலை , அமராவதி போன்றவர் பற்றி சொன்ன விவரங்கள் எனக்கு தெரியாமல் தன் சொல்லியுள்ளேன் என்று நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்துள்ளாதால் தெரியும். அமராவதி வீட்டுக்காரர் பெயர் தாண்டவர் ஆகும். அவர்களுக்கு எத்தனை வாரிசுகள் என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் வாரிசுகளின் வம்சாவழி பட்டியல் தாக்கல் செய்துள்ளார்கள் அதை வாங்கி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. என் பிரமான பத்திரிகையில் தான்டவன் அமராவதி வாரிசுகள் பற்றி தெரியாமல் உறவுமுறைகள் பற்றி சொல்லியிருக்கிறேன் என்றாலும் வா.சா.ஆ.6 பற்றி தெரியாது என்றாலும் சரிதான். அப்பு இந்த வழக்கில் எத்தனை அயிட்ட சொத்தை காட்டியுள்ளார் என்றால் தெரியாது. 2 வது அயிட்ட

சொத்து தாண்டவன் மனைவி அமராவதிக்கு பட்டா மூலம் பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன். பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15 பட்டா அமராவதி பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான். அந்த சொத்தை தான் நாங்கள் வாங்கியுள்ளோம் என்று சொன்னேன். நான் சொத்தை கிரயம் வாங்கும் முன் அமராவதி பெயரில் உள்ள பட்டாவை வாங்கி பார்க்கவில்லை என்றால் சரிதான். அமராவதி கோசலைக்கு உயில் எழுதிக் கொடுத்தாக சொல்லியுள்னேன் அந்த உயில் எந்த தேதி எந்த வருடம்எந்த மாதம் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த உயிலில் 2 வது அயிட்டத்தை நாங்கள் கிரயம் வாங்கியதாக எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரிதான். அந்த உயிலை கிரயம் வாங்குவதற்கு முன்பு எப்போது பார்த்தேன் என்றால் எப்போதும் பார்க்கவில்லை. ஒரு சொத்தை கிரயம் வாங்கும் போது அதற்கான மூல ஆவணங்களை பார்த்துதான் கிரயம் வாங்க வேண்டும் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.18 ல் இணைந்துள்ள உயிலானது 10.08.2001 ல் அமராவதி கோசலைக்கு எழுதிக் கொடுத்தது என்றால் சரிதான். மேற்படி உயிலானது ஆவண எண் 10 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது நான் கிரயம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். எனக்கு கொடுத்த கிரய பத்திரத்தில் மேற்சொன்ன உயிலை தான் மூல ஆவணமாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயிலில் சொன்ன எத்தனாவது அயிட்டத்தை நான் வாங்கியுள்னேன் என்றால் அயிட்ட எண் நினைவில்லை. சர்வே எண் மட்டும் நினைவில்லை. உயில் சாசனத்தில் அயிட்டம் 2 ல் சேலம் ரிடி, கொளத்தூர் சப்ரிடி, சிங்கிரிபட்டி கிராமம் பட்டா எண்.31 பழைய ச.எண்.452/16 புதிய சஎண்.544/10 ,புஹெ.0.56.0 க்கு பு.ஏ 1.38 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்தைதான் நான் வாங்கியதாக எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரிதான். என்னுடைய கிரய ஆவணத்தில் சேலம் ரிடி, கொளத்தூர் சப்ரிடி, சிங்கிரிபட்டி கிராமம் புதிய சஎண்.546/6 ,புஹெ.0.40.0 க்கு தீர்வை ரூ.0.50 என்ற பு.எ.0.99 செண்ட் விவசாய நிலம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். பட்டா எண்.911 என்று உள்ளது என்றால் சரிதான். உயிலில் 2 வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ள சொத்துக்கும் நான் கிரயம் வாங்கிய சொத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் அது பற்றி தெரியாது, 1.38 செண்டில் 0.99 செண்ட் வாங்கினேன் என்பது என் எதிர்வாதம்

என்றால் என் கிரயப்பத்திரத்தில் 1.38 செண்டில் 0.99 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு இல்லை 0.99 செண்ட் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. என் பிரமான பத்திரத்தில் 10.08.2001ல் உயில் எழுதி வைத்துள்ளார் என்று சொல்லிவிட்டு தற்போது அந்த உயிலையே பார்க்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ 1 ஆவணம் மேலே சொன்ன உயில் 10.08.2001 என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன உயிலில் சேலம் ரிடி, கொளத்துர் சப்ரிடி, சிங்கிரிபட்டி கிராமம் பட்டா எண்.911 பழைய ச.எண்.452/ புதிய சஎண்.546/6 ,புஹெ.0.40.0.0க்கு பு.எ.40.00 செண்ட் என்று கண்டுள்ளது என்று அடித்து பட்டா எண், ச.எண்.திருத்தப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒரே தேதியிட்ட அமராவதி கோசலைக்கு எழுதிக் கொடுத்த ஒரே உயிலான என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் ச.எண். விஸ்தீரணம், பட்டா எண் ஆகியவற்றை பொறுத்து மாறுபாடு உள்ளது என்றால் வித்தியாசம் உள்ளது. இரண்டு ஆவணத்திலும், எழுதியவர், சாட்சிகள் அனைவரும் ஒரே நபராக காணப்படுகிறது என்றால் சரிதான் ஆனால் அதைப்பொறுத்து நான் கருத்து கூறமுடியாது. தவறான ச.எண்., பட்டா என், விஸ்தீரணம் கொடுத்து பதிவு செய்துள்ளார்கள் என்றாலும் பின்னிட்டு நானும், 7 முதல் 9 பிரதிவாதிகளும் பதிவு செய்யப்பட்ட உயிலை திருத்தம் செய்து போர்ஜரியாக ஒரு கிரய ஆவணத்தை உருவாக்கி உள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் தான் உயிலைப்பற்றி எதுவும் தெரியாது என்று மலுப்பலாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மின் தடை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

ஒம்/-DW3,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.